FOKUS WOMEN

# இலங்கையில் வடக்கில் ஏற்பட்ட யுத்தத்தினால் பாதிப்புற்ற பெண் குடும்பத் தலைவிகள் மீதான பாலியல் இலஞ்சம்

## பின்னணி:



பெண்கள் தங்களது பால்நிலை காரணமாக இலகுவில் ஊழல்களின் நிமித்தமும் வேறு பல்வேறு விதங்களிலும் பாதிப்புறலாம். மேலும் குறிப்பாக, பெண்களைப் பாதிக்கும் பல்வேறு வடிவங்களிலான ஊழல்கள் நிலவுகின்ற போதிலும், இச்செயற்பாடுகள் அனேகமான சந்தர்ப்பங்களில் அறிக்கையிடப்படுவதுமில்லை: அளவிடப்படுவதுமில்லை. அவை எப்பொழுதும் ஊழலாக நோக்கப்படாமையும், பாலியல் குற்றச் செயல்களுடன் தொடர்புற்ற வெட்க உணர்வுமே இவற்றுக்கான பிரதான காரணங்களாகும்.

வடக்கில் யுத்தத்தின் முடிவு, பெண்களுக்குப் புதிய சவால்களை ஏற்படுத்தியுள்ளது. அரசு மற்றும் அரச சாரா நிறுவனங்களின் அதிகாரிகள், சட்ட சேவை, பொதுச் சேவை, பாதுகாப்பு மற்றும் சட்ட அமுலாக்கம் எனபவற்றிற்கு பொறுப்பான அரச உத்தியோகத்தர்கள் பெண்களைப் பாலியல் சுரண்டலுக்கு ஆளாக்குவது குறித்த அறிக்கைகள் மனித உரிமை அமைப்புகளால் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. பாலியல் சுரண்டல்கள் குறித்த இச்செயல்வாதம் விசேடமாக அரசாங்கம் யுத்தத்திற்குப் பின்னரான கொள்கைச் சீர்திருத்தங்களை நோக்கி நகரும் இச்சூழமைவில் இயைபுள்ள அதிகாரிகளின் உடனடிக் கவனத்தைக் கோரி நிற்கின்றது.

**இந்த ஆய்வு இலங்கையில் பாலியல் இலஞ்சத்துக்குத் தீர்வு காண்பதற்கான நடைமுறைச் சட்டச் சட்டகத்தின் ஒரு பொதுவான பார்வையை வழங்குவதோடு, யுத்தத்தினால் பாதிப்புற்ற வட மாகாணத்தைச் சேர்ந்த பெண் குடும்பத் தலைவர்கள் குறித்த 25 சம்பவக்கற்கைகளையும் கலந்துரையாடுகின்றது. இது குறிப்பாக அவர்கள் எதிர்நோக்கும் இக்கட்டான சூழ்நிலைகளை வெளிச்சமிட்டுக் காண்பிக்கும் நோக்கத்தைக் கொண்டதாகும்.**

## வரைவிலக்கணங்கள்

பாலியல் சுரண்டல் அல்லது இலஞ்சம் தொடர்பில் பிரயோகமாகும் சட்டங்கள் செயற்பாட்டின் தன்மை மற்றும் அது இடம்பெறும் சூழமைவு என்பவற்றைப் பொறுத்து வேறுபடலாம். இது இந்த கருப்பொருள் சம்பந்தமான சர்வதேச மற்றும் தேசிய சட்டவாக்க வீச்சிலிருந்தும், முன்தீர்ப்புச் சட்டங்களிலிருந்தும் தெளிவாகின்றது. எவ்வாறாயினும், இந்த ஆய்வின் நோக்கங்களுக்காக-

- பாலியல் இலஞ்சம் என்பதை அதிகாரப் பதவிகளிலுள்ள ஆண்கள் (எமது ஆய்வில் குடும்பத் தலைவிகளான பெண்களிடமிருந்து) “ஒரு சேவைக்கு அல்லது உதவிக்குப் பதிலாகக்கோரும் பாலியல் ரீதியான அனுகூலம்” என வரைவிலக்கணப்படுத்தலாம்.
- பாலியல் சுரண்டல் என்பதன் கருத்து ஊதியத்துக்குப் பதிலாக ஒரு பாலியல் செயற்பாட்டைக் கேட்டுப் பெற்றுக் கொள்வதாகும். இது அச்சமூட்டுதல், பலவந்தம் செய்தல் அல்லது வேறு வடிவங்களிலான கட்டாயப்படுத்தல் போன்ற வழிகள் உள்ளிட்ட வகையில் ஒருவரின் விருப்பத்திற்கெதிராக அல்லது அவர் அறியாத வகையில் செயற்படுவதாகும். இது அதிகாரத் துஷ்பிரயோகம், ஒருவரின் இலகுவில் பாதிப்புறும் தன்மை அல்லது ஒருவர்மீது கட்டுப்பாட்டைக் கொண்டிருக்கும் வேறொரு நபர் அந்த நபரின் சம்மதத்தைப் பெற்றுக் கொள்வதற்காகப் பணக் கொடுப்பனவுகளையும், அனுகூலங்களையும் வழங்குவதை அல்லது பெற்றுக் கொள்வதை உள்ளடக்கும் ஒரு விடயமாகும்.
- பாலியல் சுரண்டல் என்பது பாலியல் இலஞ்சம் என்கின்ற வகைப் பிரிவுபடுத்தப்பட்டுள்ள அனைத்தையும் தழுவும் கருப்பொருளாகும். ஆகவே, பாலியல் இலஞ்சம் என்பது ஒரு வடிவத்திலான பாலியல் சுரண்டலேயாகும்.

## முறையியல்

- இந்த ஆய்வு பாலியல் சுரண்டல் குறித்த முறைப்பாடுகள் இடம்பெற்ற வடக்கில் வேறுப்பட்ட நலன்பிரதிநிதிகளுடனான கலந்தாலோசனைகளின் பின்னர் நடத்தப்பட்டதாகும்.
- வீட்டில் ஆண் ஒருவர் இல்லாத காரணத்தால் பெண் குடும்பத் தலைவிகள் கூடுதலான பாலியல் தொல்லைகளுக்கு முகங்கொடுப்பதோடு, பாலியல் சுரண்டல்களுக்கும் இலகுவாகப் பலியாகும் நிலையிலுள்ளோராக இருப்பதால் இவர்களே இந்த ஆய்வின் இலக்குக் குழுக்களாக உள்ளனர்.
- இந்த ஆய்வு, வட மாகாணத்தின் யுத்தத்தினால் பாதிப்புற்ற சகல 5 மாவட்டங்களிலும் நடாத்தப்பட்டது.
- வட மாகாணத்திலிருந்து வெளியேற்றப்பட்ட, உள்நாட்டில், இடம்பெயர்ந்தோர்களாகிய முஸ்லீம் பெண்களின் அனுபவத்தையும் உள்ளடக்கும் வகையில், வட- மேல் மாகாணத்திலுள்ள புத்தளம் மாவட்டமும் ஆய்வில் உள்ளடக்கப்பட்டது.
- 25 சம்பவக்கற்கைகள் மேற்கொள்ளப்பட்டன. (21 தமிழ்ப் பெண்கள் மற்றும் 4 முஸ்லீம் பெண்கள்)
- நேர்காணலில் ஈடுபட்ட 10 பேர் விடய ஆய்வுகளில் ஈடுபட்டனர். இங்கு நேர்காணுவோர் தீவிரமான பெண்ணுரிமைச் செயற்பாட்டாளர்களுமாவர். அதேவேளையில், இவர்களுட் சிலர், தொழில்சார் உளவள ஆற்றுப்படுத்தலில் பயிற்சி பெற்றோரும் ஆவர்.
- அரச அதிகாரிகளுடன் இலக்கு வைக்கப்பட்ட கவனக் குழுவினர் கலந்துரையாடல்களும் இடம்பெற்றன.
- நேர்காணப்பட்டவர்களுக்கு தீங்கு விளைவித்திருக்கக்கூடிய கணிசமான அளவிலான தகவல்கள் உள்ளடக்கப்படவில்லை.
- பல விடய நிகழ்வுகளில், ஏதோவொரு கட்டத்தில் ஒப்புறுதிப்படுத்தலை அவசியமாக்கும், நம்பக்கூடிய சாட்சியங்களும் அகற்றப்பட்டுள்ளன.

## தேடல் முடிவுகள்

### வடக்கில் அதிகரித்த பெண்கள் பாலியல் சுரண்டலுக்கான காரணங்கள்:

- குடும்பத்திலிருந்த ஆண் அங்கத்தவர்களின் மரணம் அல்லது காணாமற்போதல் காரணமாக குடும்பத் தலைவிகளான பெண்களின் எண்ணிக்கை அதிக அளவில் உயர்ந்துள்ளது.
- யுத்தம் முடிவடைந்த பின்னர் அதிகரித்த இராணுவமயமாக்கல்.
- மீள்குடியேற்ற மற்றும் அபிவிருத்தித் திட்டங்களை வடிவமைப்பதில் அவர்களின் அனுபவங்களைக் கவனத்திற் கொள்ளத் தவறியமை.
- தீர்மானம் மேற்கொள்ளும் மட்டங்களில் அவர்களின் பங்கேற்பையும், பிரதிநிதித்துவத்தையம் உறுதி செய்யத் தவறியமை.
- சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் நிலவும் செயலின்மையும், ஊழலும் நீதிமுறைமையியல் தாமதங்களும், பால்நிலைக் கூருணர்வின்மையும்.

## பாதிக்கப்பட்டவர்களின் சுயவிபரம்:

- பாலியல் சுரண்டல்களுக்கு உட்பட்டோர் அனேகமாக 25-35 வயதிற்கிடைப்பட்ட தமிழ்ப் பெண்களாவர். இவர்கள் இளவயதில் திருமணம் செய்து பின்னர் கணவனை இழந்தோராவர்.
- பலருக்குத் தங்கிவாழும் பிள்ளைகளும், முதியவர்களும் உள்ளனர். இவர்கள் குடும்பத்திற்காக உணவு தேடுவோர் மற்றும் கவனப்பராமரிப்பு வழங்குவோரெனப் பன்முகப் பாத்திரங்களை ஏற்றுள்ளனர்.
- மூன்று முஸ்லீம் பெண்களின் விவகாரங்கள் காதி நீதிமன்றங்கள் மூலம் உதவிகளைப் பெற்றுக்கொள்வதோடு தொடர்புற்றவையாகும்.
- ஒரே உத்தியோகத்தர்கள் பாலியல் இலஞ்சம் கேட்ட நான்கு விடய நிகழ்வுகளைக் காணக் கூடியதாகவுள்ளது.
- 19 பெண்கள் அரச சேவைகளினூடாக வீடமைப்பு அல்லது அது தொடர்பிலான ஆதரவு, வாழ்வாதார உதவிகள் அல்லது வேலை வாய்ப்புகளை நாடும் தாய்மாராவர்.
- பெண்கள் கொடுப்பதற்குத் தம்மிடம் பணமோ, வேறு பொருளாதாரச் சொத்துக்களோ இல்லாத காரணத்தால், தம்மிடம் பாலியல் இலஞ்சம் கோரப்படுவதாகத் தெரிவித்தனர்.
- அவர்கள் தனிமையில் வாழுவதாலேயே இந்த ஆண்கள் அவர்களை இலகுவாகப் பாதிப்படையச் செய்வதாக நேர்காணப்பட்டோர் தெரிவித்தனர்.
- நாம் பேசிய 23 பெண்கள் தமது உள அதிர்ச்சியைக் கையாளும் விடயத்தில் உளவள ஆற்றுப்படுத்துநர்களையோ, வேறு தொழில்சார் நிபுணர்களையோ நாடவில்லை.
- அவர்களுள் இருவர் மாத்திரமே தாம் உளவள ஆற்றுப்படுத்தலையோ, உளவியல் சிகிச்சையையோ பெற்றுக்கொண்டதாகத் தெரிவித்தனர்.
- எட்டுப்பேர் மௌனமாக இத்துயரத்தை அனுபவித்தது போலத் தோன்றியது. இன்றுவரையில் இவர்களின் துன்பம் தொடருகின்றது.

- ஆறுபேர் இதுகுறித்து முதல் தடவையாகப் பேசியதில் ஆறுதலடைந்திருந்தனர். ஆரம்பத்தில் இந்த நிகழ்வுகளைப் பற்றிப் பேசுவதில் பெரும் விருப்பமின்மை காணப்பட்டது.
- பேசிய பின்னர் அவர்களுள் இருவர் குற்றஞ்சாட்டப்பட்டவருக்குத் தண்டனை பெற்றுக் கொடுக்கும் வகையில் அவர்களைக் கண்காணித்து, சாட்சியங்களைத் திரட்ட விரும்புவதாகத் தெரிவித்தனர்.
- (வவுனியாவிலும். மன்னாரிலும்) இரு விடய நிகழ்வுகளில் குற்றஞ் சாட்டப்பட்ட உத்தியோகத்தர் வேறு பெண்களிடமிருந்தும் பாலியல் இலஞ்சம் கோரியமை சம்பந்தமாகச் சில சாட்சியங்களைத் திரட்டியுள்ளதாகத் தெரிவித்தனர்.
- இங்கு விபரிக்கப்படும் 25 விடய நிகழ்வுகளில் ஆறு பெண்கள் முதற் தடவையாக வெளியார் ஒருவருடன் இந்த நிகழ்வு குறித்துக் கதைத்தனர்.
- ஏழு பெண்கள் மாத்திரமே உத்தியோகபூர்வமாக முறைப்பாடுகளைச் செய்தனர்.
- முறைப்பாடுகளைச் செய்தோர் ஆண்களான குடும்ப அங்கத்தினர்களின் ஆதரவைக் கொண்டிருந்தனர். அத்தகைய ஆதரவு இல்லாதோர் இந்த விவகாரம் குறித்து வெளிப்படுத்தப் பயந்தனர்.
- இப்பெண்கள் தீவிர கண்காணிப்பும், சமூகத்திலிருந்து ஒதுக்கி வைத்தலும் பாலியல் இலஞ்சம் கேட்கும் உத்தியோகத்தர்கள் தம்மை மேலும் தொல்லை செய்வதற்கு உதவுமென்றும் தெரிவித்தனர்.
- அவர்கள் தமது பிள்ளைகள் குறித்துப் பயமடைந்தனர். பாலியல் இலஞ்ச நிகழ்வு பகிரங்கமாகினால் பிள்ளைகளுக்கு ஏற்படக்கூடிய அவமானத்தை நினைத்துப் பயந்தனர்.
- குற்றஞ்சாட்டப்பட்ட எவருக்கும் எதிராகக் குற்றப்பத்திரிகை எதுவும் வழங்கப்படவில்லை. மாறாக, அவர்கள் வேறோர் இடத்துக்கு மாற்றம் செய்யப்பட்டனர்.
- பலர் இதை ஓர் அனைத்தையும் தழுவிநிற்கும் பால்நிலை விவகாரமாகக் கருதியபோதிலும், சிலர் இதைப் பால்நிலைப் பாராபட்சமாக மாத்திரமன்றி, ஓர் இனத்துவப் பாரபட்சமாகவும், நோக்கினர்.

## குற்றவாளிகளா அல்லது குற்றஞ் சுமத்தப்பட்டவர்களா?

*இந்த ஆய்வு குறிப்பாக யுத்தத்தின் பின்னராக, பெருமளவுக்குத் திரும்பிவருதல், புனர்வாழ்வு, மீள்குடியேற்றம் மற்றும் அபிவிருத்தியுடன் தொடர்புற்ற கட்டமைப்புகளில் பெண்கள் பாலியல் இலஞ்சத்துக்கும், சுரண்டலுக்கும் இலகுவாகப் பாதிப்படைவதை இனங் காணுகின்றது. இவ்வாறே, பெண்கள் உண்மை, நீதி மற்றும் மீளளிப்பு என்பவற்றுக்காகவே அதிகமாக அரச நிறுவனங்களை நாடிச் செல்லுகின்றனர். இதன்விளைவாக, இக்காரணங்களுக்காக அவர்கள் அணுகிய அதிகாரிகள் இப்பெண்களைப் பாலியல் சுரண்டலுக்கு உள்ளாக்கினர்.*

1. சட்ட சேவை, பொதுச்சேவை, பாதுகாப்பு மற்றும் சட்ட அமுலாக்கம் எனபவற்றிற்கு பொறுப்பான அரச உத்தியோகத்தர்கள்.
2. மனிதாபிமான மற்றும் சமூக சேவையாளர்கள்
3. உளவியல் சிகிச்சை சமூகப் பணியாளர்
4. மதத்தலைவர்கள்
5. பல்கலைக்கழக விரிவுரையாளர்

*விடய ஆய்வுகளில் குறிப்பிடப்பட்டுள்ள அனேகமான அதிகாரிகள் இத்தகைய பாலியல் சுரண்டல் நடவடிக்கைகள் குறித்து ஏலவே பிரபலம் பெற்றவர்களாக இருந்தபோதிலும், அத்தகைய மீறல்கள் குறித்து அவர்களுக்கெதிராக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லையென்பது கவனிக்கத்தக்கதாகும்.*

## மேற்குறிப்பிடட்ட உத்தியோகத்தர்களிடம் உதவி நாடிச் செல்கின்ற பாதிப்புற்ற பெண்களின் சூழ்நிலைகள்

- அரசாங்க அதிகாரிகள் பல்வேறு அரசாங்க உதவிகளை வழங்குவதற்குப் பெண்களிடமிருந்து பல்வேறு பாலியல் சலுகைகளையும் கோருகின்றனர். உ-ம்: வதிவுச் சான்றிதழ் அல்லது நற்சான்றிதழ் வழங்குதல் அல்லது புனர்வாழ்வு அல்லது மீள்குடியேற்ற உதவியைப் பெற்றுக் கொள்வதற்கான தகுதியை நிரூபிக்கும் ஆவணங்கள் வழங்குவதற்கு.
- வேலைவாய்ப்பு அல்லது வாழ்வாதார உதவியை வழங்குவதற்குப் பிரதியுபகாரமாக பாலியல் சலுகைகளைக் கோருகின்றனர்.
- காணாமற்போன குடும்ப அங்கத்தவர் அரச உத்தியோகத்தர்களை நாடும் பெண்களிடமிருந்து அங்குள்ள உத்தியோகத்தர்கள் பாலியல் சலுகைகளைக் கேட்கின்றனர்.
- உத்தியோகபூர்வ நோக்கங்களுக்காகப் பொலிசாரை நாடிச்செல்லும் பெண்களைப் பொலிசார் பாலியல் சுரண்டலுக்கு ஆளாக்குகின்றனர். உ-ம்: நிகழ்ச்சி ஒன்றை நடாத்துவதற்கு அனுமதி பெற்றுக்கொள்ளுதல்.
- நீதிமன்ற உததியோகத்தர்கள் பாதிக்கப்பட்ட பெண்களின் சட்ட ரீதியான அல்லது வேறு நிர்வாக விடயங்கள் குறித்து நடவடிக்கை எடுப்பதற்குப் பாலியல் சலுகைகளைக் கோரியுள்ளனர்.
- அதிகாரிகள் பாலியல் சுரண்டலுக்குப் பெண்கள் மறுப்புத்

தெரிவித்தால் அவர்களைப் பாதகமாகப் பாதிக்கக்கூடிய நடவடிக்கைகளை எடுத்துக்கூறி அவர்களை அச்சுறுத்துவதன் மூலம் பாலியல் சுரண்டல்களை நடத்தியுள்ளனர்.

- குடும்பத் தலைவர்களான பெண்கள் உதவிநாடி உத்தியோகத்தர்களை அணுகும்போது அவர்களிடம் பாலியல் சலுகைகளைக் கேட்கும் போக்கு உள்ளது. உ-ம்: சேவைகள் அவர்களுக்குக் கிடைப்பதை விரைவுபடுத்துவதற்கு, பயனாளிகள் நிரல்களில் தமது பெயர்களுக்கு முன்னுரிமை வழங்குவதற்கு, அவர்களின் தகுதியீனங்களைப்பாராமல், உதவித் திட்டங்களில் பெயர்களை உள்ளடக்குவதற்கு, அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தித் தமக்கு அல்லது தமது பிள்ளைகளுக்கு வேலை பெற்றுக்கொள்வதற்கு மற்றும் ஏதாவது தவறான விடயங்களைச் செய்துவிட்டு அதிலிருந்து மறைந்து கொள்வதற்கு.

## பாலியல் சுரண்டல்களின் வகைகள்

- பாலியல் வல்லுறவு (சில விடய நிகழ்வுகளில் பல தடவைகள்)
- பாலியல் தொந்தரவு மற்றும் முறையற்ற உடல் ரீதியான நடத்தை
- பாலியல் உடலுறவுக் கோரிக்கைகள் உள்ளிட்ட வகையிலான வாய்மூலப் பாலியல் தொல்லைகள்
- ஒரு குறிப்பிட்ட வழியில் நடந்து கொள்ளுமாறு கோரி / விடயங்களைச் செய்து கொள்வதற்காக ஏதாவது குறிப்பிட்ட நடத்தைகளைச் சகித்துக் கொள்ளுமாறு கோரி விடப்படும் வாய்மூல அச்சுறுத்தல்கள்
- அனேகமான சந்தர்ப்பங்களில் குற்றமிழைப்பவர் குடிவெறியில் இருக்கும்போது, இரவுவேளைகளில் தொலைபேசிமூலம் இடம்பெறும் தொல்லைகள்
- தேவையானவற்றைப் பெற்றுக் கொள்வதற்குப் பாதிப்புறும் பெண்கள் குற்றமிழைப்பவரைத் தனிமையில் சந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுதல்

## நிவாரணம் அல்லது பரிகாரம்தேடி பெண்கள் ஏன் செல்வதில்லை

- மொழித்தடை காரணமாக அவர்கள் நீதியை நாட முடியவில்லை: உ-ம்: இலஞ்ச விசாரணை ஆணைக்குழுப் பதவியினர் பாதிப்புற்றவரிடம் சிங்கள மொழியில் மாத்திரமே பேசியுள்ளனர்.
- குற்றமிழைப்பவர்கள் சாதாரணமான நபர்கள் அல்லர். இவர்கள் அதிகாரப் பதவிகளில் உள்ளவர்களாவர்.
- இலங்கைச் சட்டத்தின்கீழ் பாலியல் இலஞ்சம் தவறாகுமென்பதை அவர்களுள் அரைவாசிப்பேராவது அறிந்திருந்த வேளையிலும், எங்கு சென்று முறையிடுவது என்பது சம்பந்தமான தெளிவான சிந்தனையொன்று பலரிடம் இருக்கவில்லை.
- நேர்காணலில் கலந்துகொண்ட 25 பெண்களுள் 23 பேர் பாலியல் இலஞ்ச விவகாரங்களைக் கையாளும் நடைமுறைக் கட்டமைப்புகளில் தமக்கு எதுவித நம்பிக்கையும் இல்லையென்று தெரிவித்தனர்.
- பொலிஸில் முறைப்பாடு செய்வது குறித்துப் பலர் பாரதூரமான கரிசனையை வெளியிட்டனர். சில குழுக் கலந்துரையாடல்களில் பெண்கள் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் கட்டமைப்புகளில், விசேடமாகப் பொலிசில் நிலவும் ஊழல் மற்றும் பாலியல் விருப்பு என்பவை குறித்துத் தொடர்ச்சியாகப் பேசினர்.
- சமூக அவப்பெயர்

1. தாம் முறையற்ற விதத்தில் நடந்து கொண்டதாக சிந்திப்பார்கள் என்பதால், இந்தச் சம்பவம் குறித்து ஒரு நெருங்கிய சினேகிதியிடம் அல்லது குடும்ப அங்கத்தவரிடம் தெரிவிப்பதற்குத் தனித்த பெண்கள் விரும்பவில்லை.
2. குறைந்தது ஐந்து ஆய்வுச் சம்பவங்களிலாவது பாதிக்கப்பட்டோரின் தாய், அயலவர் அல்லது மாமியார் பாலியல் இலஞ்சம் கேட்ட உத்தியோகத்தரிடம் மிகவும் நெருங்கிச் சென்றது அல்லது அந்தவேளையில் அணிந்திருந்த ஆடை சம்பந்தமாக அவளைக் குறை கூறினர்.
3. பல தனித்த பெண்கள் நடந்த சம்பவம் குறித்து எவரிடமாவது கூறினால், அது தமக்கு அவமானமாகுமென்றும், சமூகம் அல்லது குடும்ப அங்கத்தவர்கள் தமது நடமாட்டங்களைக் கட்டுப்படுத்துவரென்றும் பயந்தனர்.
4. விடய ஆய்வுகளில் குறைந்தது மூன்று பெண்கள் தாம் ஆண்களின்றி மிக நீண்டகாலம் வாழ்ந்துவிட்டதால், பாலியல் சுரண்டல் குறித்து முறைப்பாடு செய்தால், தாம் பொய் சொல்லுகிறோம் அல்லது கற்பனையாகப் பேசுகிறோமென்று ஏனையோர் கூறுவார்களென்று தெரிவித்தனர்.
5. ஒரு பெண் தனது நீண்ட கூந்தலே ஆண்களைக் கவருவதாக எண்ணியதால், தலைமயிரை வெட்டினார்.

## பாலியல் சுரண்டலுக்கு ஆளாவோர் செல்ல வேண்டிய இடங்கள்

பாலியல் சுரண்டல்களுக்கு ஆளாகும் குடும்பத்தின் பெண் தலைவிகள் நிவாரணம் அல்லது பரிகாரம் தேடிச் செல்லக்கூடிய சட்ட மற்றும் நிறுவனப் பொறிமுறைகள் கீழே நிரலில் தரப்பட்டுள்ளன.

**சட்ட:**

- மனித உரிமைகள் ஆணைக்குழு ☎ : 011-2689064
- இலஞ்ச விசாரணை ஆணைக்குழு ☎ : 011-2586257
- சட்ட உதவி ஆணைக்குழு ☎ : 011-5335329 / 011-5335281
- சட்ட விடயங்களைக் கையாளும் Women in need போன்ற அரச சார்பற்ற நிறுவனங்கள்
- பகிரங்க சேவை ஆணைக்குழு ☎ : 011-2136600/650/700
- பொலிஸ் ஆணைக்குழு ☎ : 011-5107722

**பாதுகாப்பு:**

- சகல பொலிஸ் நிலையங்களிலுமுள்ள பெண்கள் மற்றும் சிறுவர் கருமபீடம் ☎ : 011-2826444/ 011-2768076
- பிரதேச செயலகங்களிலுள்ள பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்
- பெண்களுக்கு ஆதரவு வழங்கும் அதிகாரிகளும், மத நிறுவனங்களும் செயற்படுத்தும் புகலிடங்கள்

**மருத்துவ உதவி:**

- ஏதாவது அரசாங்க வைத்திய-சாலையிலுள்ள பால்நிலை அடிப்படையிலான வன்செயல் குறித்த (GBV) கருமபீடம்

**உளவியல் – சமூகப் பாதுகாப்பு**

- மகளிர் சம்பந்தமான தேசியக்குழு ☎ : 1938 or 011-2186063
- மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் சிறுவர் மற்றும் மகளிர் அபிவிருத்தி அலகுகள்
- பிராந்திய மற்றும் தேசிய மட்டங்களில் செயற்படும் பெண்கள் அமைப்புகள் (அரச சார்பற்ற நிறுவனங்கள் / சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள்)

**உளவள ஆலோசணை:**

- தேவைநாடும் மகளிர் (WIN) ☎ : 011-4718585
- பெணகள் அபிவிருத்தி நிலையம் ☎ : 081-2234511/2228158

## விதப்புரைகள்

1. "பாலியல் கையூட்டு" என்பதை ஒரு குறித்துரைப்பான கையூட்டு வடிவமாக உள்ளடக்கும் வகையில் இலஞ்சச் சட்டம் திருத்தப்படுதல் வேண்டும். பாலியல் கையூட்டுக்கான தண்டனைகள் அதிகரிக்கப்படுதல் வேண்டும்.
2. அரசுத்துறை நிறுவனங்களில் பாலியல், தொந்தரவுகளுக்குத் தீர்வுகாணும் வகையில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவினால் அபிவிருத்தி செய்யப்பட்ட வழிகாட்டல்கள் பாலியல் இலஞ்சம் குறித்த முறைப்பாடுகளைக் கையாளும் வகையில் திருத்தப்படுவதோடு, மனித உரிமைகள் ஆணைக்குழு இதற்குத் தீர்வு காண்பதற்கான ஒரு விசேட முறைப்பாட்டு நடவடிக்கை முறையை உருவாக்குதல் வேண்டும்.
3. சகல யுத்தத்துக்குப் பின்னரான சேவை வழங்கல் கட்டமைப்புகளிலும், உத்தேச இடைமாற்றுக் கால நீதிப் பொறிமுறைகளிலும் 50 வீதம் அல்லது அதற்கும் அதிகமான பெண்கள் பிரதிநிதித்துவம், சகல மட்டங்களிலும் உறுதி செய்யப்படுதல் வேண்டும்.
4. தற்போதுள்ள பொலிஸ் ஆணைக்குழு, தேர்தல்கள் ஆணைக்குழு, இலஞ்ச விசாரணை ஆணைக்குழு மற்றும் பகிரங்க சேவை ஆணைக்குழு போன்றவற்றுக்கு ஒரு பாலியல் இலஞ்ச விசாரணைப் பணிப்பாணையைச் சேர்த்துக் கொள்ளுதல் வேண்டும். பாலியல் இலஞ்ச விடய நிகழ்வுகளைக் கையாளும் வகையிலும் விசாரணை செய்யும் வகையிலும் இந்த ஆணைக்குழு ஒவ்வொன்றும் பால்நிலைக் கூருணர்வுமிக்க, நம்பிக்கை வாய்ந்த நடவடிக்கை முறையொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.
5. பகிரங்கச் சேவை ஆணைக்குழுவிலும், பொலிஸ் ஆணைக்குழுவிலும் மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழுவிலும் கிடைக்கக்கூடிய பரிகாரப் பொறிமுறை சம்பந்தமான பொதுமக்கள் விழிப்புணர்வு இயக்கமொன்று ஆரம்பிக்கப்படுதல் வேண்டும். இதனூடாக இப்பொறிமுறைகள் குறித்தும், அவற்றை எவ்வாறு, எதற்காக அணுகலாம் என்பது குறித்தும் பெண்கள் அறிந்து கொள்வதற்கு வழியேற்படும்.
6. இலங்கை அரசாங்கம், சகல பகிரங்க அல்லது நிர்வாக சேவைத் திணைக்களங்களினதும் தலைவர்களுக்கு பாலியல் இலஞ்சம் மற்றும் பாலியல் தொல்லை என்பவற்றை அறவே சகித்துக் கொள்ளாத கொள்கை குறித்த சுற்று நிருபத்தை அனுப்பி வைக்க வேண்டும். மீறல்கள் எதுவும் இடம்பெறுகையில், அத்தகைய விடய நிகழ்வுகளைக் கையா-ளுவதற்கும், பூரணமான விசாரணை நடவடிக்கையொன்றை மேற்கொள்வதற்குமான தகுதிவாய்ந்த குழுவொன்றை இதற்கென ஏற்படுத்துதல் வேண்டும்.
7. அரச சேவை மற்றும் கல்வி நிறுவனங்கள் பாலியல் இலஞ்சத்தைத் தடுப்பதற்கும், இத்தகைய முறைப்பாடுகளைக் கையாளுவதற்குமான உள்நாட்டுப் பொறிமுறைகளையும், வழிகாட்டல்களையும் ஏற்படுத்துதல் வேண்டும். இத்தகைய பிரயத்தனங்களோடு போதிய விழிப்புணர்வு உருவாக்கம், பெண்கள் முறைப்பாடுகளைப் பதிவுசெய்து பரிகாரங்களைப் பெற்றுக்கொள்ள ஊக்கமளிக்கும் ஆதரவுச் சூழல் என்பவற்றையும் இணைத்துக் கொள்ளுதல் வேண்டும்.

8. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் விடுக்கப்பட்ட 919 ஆம் இலக்கச் சுற்றுநிருபம் பகிடிவதையை மாத்திரமன்றி, பாலியல் இலஞ்சம் மற்றும் பாலியல் சுரண்டல் என்பவற்றையும் தடை செய்வதை உள்ளடக்கும் வகையில் திருத்தப்படுதல் வேண்டும்.

9. பெண் தலைமைத்துவக் குடும்பங்களுடன் நேரடியாகத் தொடர்புறும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள், கிராம சேவகர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பொதுச் சுகாதார உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய அரசாங்க உத்தியோகத்தர்கள் போன்ற உத்தியோகத்தர்களுக்கு பாலியல் இலஞ்சம் சம்பந்தமான ஒழுக்கநெறிக் கோவையொன்று ஏற்படுத்தப்படல் வேண்டும்.

10. சகல அரசாங்க திணைக்களங்களும், நிறுவனங்களும் பாலியல் இலஞ்ச நிகழ்வுகள் சம்பந்தமான பதிவேடுகளையும், தரவுத் தளங்களையும் பேணுவது கட்டாயமாக்கப்படுதல் வேண்டும்.

11. பாலியல் இலஞ்சத்துக்கெதிரான சட்டங்களும், பொருத்தமான தண்டனைகளும் பொலிஸ் நிலையங்களிலும், பல்கலைக்கழகங்களிலும், வெளிப்படையான இட அமைவுகளிலும், பொது இடங்களிலும், பொதுப் போக்குவரத்துச் சேவைகளிலும், சகல அரச நிறுவனங்களிலும் ஆங்கிலத்திலும், சிங்களத்திலும், தமிழிலும் காட்சிக்கு வைக்கப்படுதல் வேண்டும்.

12. இலங்கை அரசாங்கம் தற்போதுள்ள பாலியல் இலஞ்ச விடய நிகழ்வுகள் குறித்த முறைபாட்டுப் பொறிமுறைகள் குறித்து தகவல் வழங்குவதற்கும், பின்னர் இவ்விடயத்தில் ஏதாவது புதிய சட்டவாக்கம் அல்லது நிர்வாகச் சுற்றறிக்கை அல்லது பொறிமுறை இடம்பெறும்போது அவை குறித்து மக்களுக்குத் தகவல் வழங்குவதற்கும் கிராமிய மட்டங்களில் பொதுமக்கள் விழிப்புணர்வு இயக்கங்களை ஆரம்பித்தல் வேண்டும்.

13. சகல சுற்றறிக்கைகளும், விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களும் மும்மொழிகளிலும் இடம்பெறுவதோடு, மிகவும் முக்கியமாக அவை சிங்கள மொழியிலும், தமிழ் மொழியிலும் வழங்கப்படுதல் வேண்டும். பாலியல் இலஞ்ச விடய நிகழ்வுகளைக் கையாளும் வகையில் ஏற்படுத்தப்படும் முறைப்பாட்டுப் பொறிமுறைகளும், விசாரணைகளும் சிங்கள மற்றும் தமிழ் மொழிகளில் தேர்ச்சிபெற்ற பதவியினருடன் ஆரம்பிக்கப்படுதல் வேண்டும். மனித உரிமைகள் ஆணைக்குழு, பகிரங்க சேவைகள் ஆணைக்குழு மற்றும் தேசிய பொலிஸ் ஆணைக்குழு போன்ற நிறுவனங்களில் சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் திறமைமிக்கவர்கள் பதவியினராக அமர்த்தப்படுதல் வேண்டும்.

14. பாலியல் சுரண்டல் மற்றும் பாலியல் இலஞ்சம் என்பவற்றைக் கையாளும் விடயத்தில் மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கவனப் புள்ளிகளாக ஆக்கப்படுதல் வேண்டும். உளவியல் சமூக ஆதரவைப் பெற்றுக் கொள்ளக்கூடிய இடங்களுக்கு பாதிப்புற்றோரை அனுப்பி வைக்கக்கூடிய வகையில் அவர்களுக்கு அறிவும், வசதிகளும் இருத்தல் வேண்டும்.

15. மதத் தலைவர்களுக்கு பெண்களுக்கெதிரான பாலியல் சுரண்டல் மற்றும் பாலியல் இலஞ்சம் கோரப்பட்ட சந்தர்ப்பத்தில் அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய சேவைகள் குறித்து அறிவூட்டப்படுதல் வேண்டும். இதை மதத் தலைவர்கள் பரந்த சமூகத்துடன் பகிர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

16. உளவியல் சமூக உதவிகள் பரந்த அளவில் கிடைப்பது அவசியம் என்பதோடு, இச்சேவைகளை எவ்வாறு பெற்றுகொள்வது என்பது குறித்த விழிப்புணர்வும் அவசியமாகும்.

## முடிவுரை

- பாலியல் சுரண்டலும், பெண்களிடமிருந்து (அல்லது ஆண்களிடமிருந்து) சேவை வழங்குவதற்குப் பிரதியுபகாரமாக பாலியல் சலுகைகளை இலஞ்சமாகப் பெற்றுக்கொள்வதும் இலங்கைக்கு ஒரு புதிய விவகாரமல்ல. உண்மையில், பெண்களுக்கெதிரான வன்செயல்கள் குறித்து நிலவும் தண்டனைப் பயமின்மை காரணமாக அது பரந்த அளவில் நிலுவுவதோடு, அதிகரித்தும் வருகின்றது.
- எவ்வாறாயினும், வகைப் பொறுப்பு மற்றும் யுத்தம் முடிவுற்ற பின்னரான விவகாரங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுவரும் இடைமாற்றக் கால நீதிப் பொறிமுறைகளுடன் சில தடுப்பு நடவடிக்கைகளையும் ஒன்றிணைக்கும் நோக்கில் இந்த ஆய்வு வட மாகாணத்தில் நடாத்தப்பட்டது.
- இந்த ஆய்வு மீளிணக்கம் மற்றும் நிரந்தர சமாதானத்தை நோக்கிப் பணியாற்றும் கொள்கை வகுப்போர் மற்றும் சட்டவாக்க நபர்களுக்கான நேரகால எச்சரிக்கையாகும். இது ஒருவர் அனைவரையும் உள்ளடக்கும், ஒப்புரவான சமாதானத்தைக் கட்டியழுெப்ப விரும்பினால், பெண்களுக்கெதிராக நிலவும் மரபுரீதியான ஏற்றத்தாழ்வுகளுக்கும், கட்டமைப்புப் பாரபட்சங்களுக்கும் சவால்விடுக்க வேண்டியதன் அவசியத்தை வெளிச்சமிட்டுக் காண்பிக்கின்றது.
- பெண்களின் உரிமைகள் மற்றும் அவர்கள் நீதியைப் பெற்றுக்கொள்ளுதல் சம்பந்தமாக அதிகரித்துவரும் உண்மை நிலையுணர்தல் - பெண்களுக்கெதிரான சகல வடிவங்களிலுமான வன்செயல்களுக்குத் தீர்வுகாணும் சட்டங்களை வலுப்படுத்துதல், தகவல் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் தெரிவுகளைச் செய்வதற்கான பெண்களின் உரிமைகள் மற்றும் பாதிப்புற்றவர் மற்றும் சாட்சிகளைப் பாதுகாக்கும் பொறிமுறைகளை நம்பகரமான தாக்குவதும், பால்நிலைக் கூருணர்வுள்ளமை ஆக்குதலும் மற்றும் பெண்களான குடும்பத் தலைவிகள் உள்ளடங்கலாக இடைமாற்றக்கால நீதிச் செயல்முறையில் ஒவ்வொரு மட்டத்திலும் உள்ளடக்குதலும், பங்கேற்பும் - கொள்கை மற்றும் தீர்மானம் மேற்கொள்வதற்குப் பொறுப்பானவர்களால் போருக்குப் பின்னரான சூழமைவில் அர்த்தமுள்ள மீளிணக்கத்துக்கும், நிலைபேறான சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கும் தீர்மானகரமான காரணிகளாக நோக்கப்படுதல் வேண்டும்.

British High Commission Colombo

FOKUS WOMEN

FOKUS FORUM FOR KVINNER OG UTVIKLINGSSPORSMAL

சுருக்கவுரைப் பத்திரம், இல. 05, பங்குனி 2016
வெளியீடு: பொகுஸ் விமென் (FOKUS WOMEN); - 34ஏ, சுலைமான் அவனியு, கொழும்பு 05, இலங்கை. தொலைபேசி-தொலைநகல்: 0094112055404 இணையத்தளம்: www.fokuskvinner.no
எல்லா உரிமைகளுக்கும் உரியது. இந்த ஆவணம் பதிப்புரிமைக்கு உட்பட்டது என்பதுடன், மீள்விற்பனைக்குரியதும் அல்ல. ஆயினும், கற்பித்தல் நோக்கங்களுக்காக ஏதேனும் வேறு வழிமுறையில் மீளாக்கஞ் செய்யப்படலாம். வேறு சந்தர்ப்பங்களில் வேறு பிரசுரங்களில் மீண்டும் உபயோகிப்பதற்காக அல்லது மொழிபெயர்ப்புச் செய்வதற்காக பிரதிசெய்வதற்கு, பதிப்புரிமைச் சொந்தக்காரரின் முன்கூட்டிய எழுத்துமூல அனுமதியைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.